**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8082844

1. District மாவட்டம் : Madurai PS: காவல்நிலையம் : VAC Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 10/2023 Date: நாள் 10.10.2023

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by prevention of corruption (Amendment) Act 2018.
   Sections பிரிவுகள்: u/s 7 of PC Act 1988 as amended by prevention of corruption (amendment) Act 2018.
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை
   ① 15.09.2023 at 1400hrs
   ② 23.09.2023 at 12.50 hrs
   ③ 05.10.2023 at 11.30 hrs
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.10.2023 Time நேரம் 08.00 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 10.10.2023 Time நேரம் 08.45 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக தட்டச்சு செய்த புகார் மனு.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 15 கி.மீ தெற்கு (S),
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி திருப்பரங்குன்றம் தாலுகா அலுவலகம், திருநகர், மதுரை.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. P. திருவண்ணன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பாண்டி
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 02.09.1991 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் marketing executive (g) Address : முகவரி பிளாட் எண் 31, கென்னட் நகர் முதல் தெரு, கீழப்புதுப்பட்டி, மதுரை-3

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. பரமகுமார், தனி சார் ஆய்வாளர், நகர நில வரி திட்டம், திருப்பரங்குன்றம், மதுரை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   — தாமதமில்லை —

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ……………………. Rank ……………………. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ……………………. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு …………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P Kuil 10/10/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

10/10/2023

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

10.10.2023 at 09.35 hrs.

Name: பெயர் K.KUMARAGURU,
Rank: நிலை ………………… No. எண் ……….
Inspector of Police,
VHAC, Madurai.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,</u>

இன்று 10.10.2023-ஆம் தேதி காலை 08.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்து போது, மதுரை, கீழமுத்துப்பட்டி, கென்னட் நகர் முதல் தெரு, பிளாட் எண் 31 என்ற முகவரியில் வசிக்கும் பாண்டி மகன் திரு.P.கிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர், P.கிருஷ்ணன், த/பெ.G.பாண்டி, பிளாட் எண் 31, கென்னட் நகர் முதல் தெரு, கீழமுத்துப்பட்டி, மதுரை - 3. பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் கீழமுத்துப்பட்டியில் எனது மனைவி மற்றும் மகனுடன் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த பத்து வருடங்களாக Everlast Roofing Sheet company -ல் marketing Executive -வாக பணிபுரிந்து வருகிறேன். எனது மனைவியின் தாயார் திருமதி.R.அமுதா அவர்கள் கடந்த 15.12.2004 -ஆம் தேதி K.S.வாசுதேவன் அவர்களிடமிருந்து மாடக்குளம் கிராமம் உட்பிரிவு ரீசர்வே எண்கள் 454/2A24 & 453/17 -ல் இணைந்து கட்டுப்பட்டதுமான பிளாட் எண் 21 ல் ஒரு பகுதி கீழ்புறமுள்ள 1200 சதுரடியுள்ள மனையிடத்தை கிரையம் பெற்றிருந்தார். அந்த இடத்தை எனது மனைவி திருமதி.K.சரண்யா அவர்களுக்கு தானம் கொடுப்பதாக முடிவெடுத்து தான செட்டில்மெண்ட் ஆவணம் தயார் செய்யும் போது, மனையிடத்திற்கான சர்வே எண் கணினியில் வரவில்லை. இதுசம்மந்தமாக நான் விசாரித்த போது திருப்பரங்குன்றம், நகர நிலவரித்திட்ட தனி சார் ஆய்வாளர் திரு.பிரேம்குமார் அவர்களிடம் கேட்கும்படி கூறினார்கள். நானும், பிரேம்குமார் அவர்களின் கைபேசியில் தொடர்பு கொண்டு, விபரம் கூறினேன். அவரும் மறுநாள் நேரில் வருவதாக கூறினார். பின்னர் மறுநாள் 23.06.2023-ஆம் தேதியன்று திரு.பிரேம்குமார் அவர்கள் என்னை கைபேசியில் தொடர்பு கொண்டு, எனது இடத்திற்கு வந்து, என்னுடைய ஆவணங்கள் மற்றும் இடத்தை பார்வையிட்டு எனது இடத்திற்கான டவுன்சர்வே எண்ணை குறித்து Town survey Register -ன் உண்மை நகலை கையெழுத்திட்டு என்னிடம்

கொடுத்தார். அதை வைத்து எனது அத்தை திருமதி.அமுதா அவர்கள் எனது மனைவி திருமதி.K.சரண்யா பெயரில் மேற்படி இடத்தை கடந்த 24.06.2023 ஆம் தேதி பழங்காநத்தம், சார்பதிவாளர் இணை எண் -4 அலுவலக ஆவண எண் 6649/2023 -ன்படி தானமாக பதிவு செய்து கொடுத்தார். மேற்படி மனையின் தற்போதைய டவுன்சர்வே Register -ன்படி வார்டு எண் 21, திருப்பரங்குன்றம் தாலுகா, மாடக்குளம் பார்ட்-1, பிளாக் எண் -6, TS No.14/23 & 16/13 ஆகும். மேற்படி இடத்தில் நான் தற்போது வீடு கட்டுவதற்காக பட்டா வேண்டி இரண்டு டவுன்சர்வே எண்களுக்கும் தனித்தனியே 21.07.2023 -ஆம் தேதி திருப்பரங்குன்றம் தாலுகா அலுவலகத்தில் உள்ள இ-சேவை மையத்தில் தீர்வு பணிகளுக்கான விண்ணப்பத்தினை விண்ணப்பித்தேன். இரண்டு நாட்கள் கழித்து மேற்படி இடத்திற்கான தாய் பத்திரம் மற்றும் எனது மனைவியின் பெயரில் உள்ள பத்திரத்தின் நகல்களை இ-சேவை மையம் மூலம் விண்ணப்பித்த மனுக்களின் நகலுடன் இணைத்து திருப்பரங்குன்றம், நகர நிலவரித்திட்ட, தனி சார்-ஆய்வாளர் திரு.பிரேம்குமார் அவர்களை திருப்பரங்குன்றம் தாலுகா அலுவலகத்தில் சந்தித்து அதனை கொடுத்தேன். அப்போது அவர் பட்டா கிடைக்க நானே ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லியும், அதற்கு கொஞ்சம் செலவாகும் என்றும் தெரிவித்து, நான் கூப்பிடும் போது வாங்க என்றும் சொல்லி அனுப்பி விட்டார். அதன்பின்னர் கடந்த இரண்டு மாதங்களாக நேரடியாகவும், கைப்பேசி வாயிலாகவும் திரு.பிரேம்குமார் அவர்களை தொடர்பு கொண்டு எனது மனைவி பெயரில் பட்டா கிடைக்க ஏற்பாடு செய்து தருவது குறித்து கேட்டேன். அதற்கு திரு.பிரேம்குமார் அவர்கள் உங்கள் இடத்தை வந்து பார்வையிட்டு, அளவீடு செய்து, பட்டா கிடைக்க ஏற்பாடு செய்வதாக கூறினார். பின்னர் 14.09.2023 ஆம் தேதி நான் திரு.பிரேம்குமார் அவர்களுக்கு பட்டா குறித்து போன் செய்தபோது நாளை (15.09.2023) மதியம் கைப்பேசியில் பேசும்படி தெரிவித்தார். அதன்பேரில் நான் 15.09.2023 -ஆம் தேதி மதியம் சுமார் 1.45 மணியளவில் பிரேம்குமார் அவர்களுடன் கைப்பேசியில் பேசியபோது தான் முத்துப்பட்டியில்தான் இருப்பதாகவும், தன்னை நேரில் வந்து சந்திக்கும்படி

கூறினார். அதன்பேரில் நான் முத்துப்பட்டி முனியாண்டி கோவில் அருகில் மதியம் சுமார் 2 மணியளவில் அவரை சந்தித்து எனது மனைவி பெயரில் பட்டா கிடைக்க ஏற்பாடு செய்துதருவது குறித்து கேட்டேன். அதற்கு அவர் உங்களுடைய ஆவணங்கள் மற்றும் இடத்தை ஏற்கனவே பார்வையிட்டு ட்வுன்சர்வே Register -ன் உண்மை நகல் தங்களுக்கு கொடுத்துவிட்டேன். உங்களது மனைவி பெயரில் பட்டா கிடைக்க ஏற்பாடு செய்ய தனக்கு ரூ.14,000/-ம் கொடுக்கவேண்டும் என்று கேட்டார். என்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று கூறினேன். அதற்கு அவர் ரூ.14,000/- கொடுத்தால் தான் பட்டா கிடைக்கும் என்று கண்டிப்பாக கூறினார். அவரிடம் நான் தற்போது பணம் கொண்டுவரவில்லை என தெரிவித்து வந்துவிட்டேன். பின்னர் கடந்த 23.09.2023-ஆம் தேதி மதியம் சுமார் 12.50 மணியளவில் திரு.பிரேம்குமார் அவர்கள் அவரது கைப்பேசி எண் 96291-30261 என்ற எண்ணிலிருந்து எனது கைப்பேசி எண் 99400-50317 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு எனது மனைவி பெயரில் பட்டா கிடைக்க ஏற்பாடு செய்ய, தான் கேட்ட பணம் ரூ.14,000/- ம் ரெடி பண்ணி விட்டீர்களா என்று என்னிடம் கேட்டார். நான் அவரிடம் என்னால் அவ்வளவு பணம் ஏற்பாடு செய்ய முடியாது என்று தெரிவித்தேன். அதற்கு அவர் நேரில் வந்து பேசிக்கொள்வதாக தெரிவித்து கைப்பேசியை துண்டித்துவிட்டார். பின்னர் 05.10.2023 -ஆம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் திருப்பரங்குன்றம் தாலுகா அலுவலகத்தில் வைத்து திரு.பிரேம்குமார் அவர்களை சந்தித்து எனது மனைவி பெயரில் பட்டா கிடைக்க ஏற்பாடு செய்துதருவது குறித்து கேட்டபோது அவர் தான்கேட்ட பணம் ரூ.14,000/- கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். நான் அவரிடம் அவ்வளவு பணம் ஏற்பாடு செய்யமுடியவில்லை, வேலையும் கஷ்டமாக உள்ளது என்று தெரிவித்தேன். அதற்கு அவர் உங்களுக்காக ரூ.4,000/-ம் குறைத்து கொள்கிறேன். நீங்கள் ரூ.10,000/- கொடுங்கள், பட்டா கிடைக்க ஏற்பாடு செய்கிறேன் என்று தெரிவித்தார். நான் அவரிடம் பணம் அதிகமாக கேட்கிறீர்களே என்று கேட்டேன். அதற்கு அவர் ரூ.10,000/- கொடுக்காவிட்டால் உங்களது விண்ணப்பத்தை நிராகரித்துவிடுவேன் என கூறி, அந்த பணம்

ரூ.10,000/-த்தை செவ்வாய்கிழமை காலை திருப்பரங்குன்றம் தாலுகா அலுவலகத்தில் தன்னை சந்தித்து கொடுக்க வேண்டும் என்று கண்டிப்பாக கூறிவிட்டார். நான் மிகவும் கஷ்டத்தில் இருக்கிறேன். மேலும் எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. எனவே, அரசு இலவசமாக வழங்கும் பட்டாவை எனது மனைவி பெயரில் பட்டா கிடைக்க ஏற்பாடு செய்ய என்னிடம் ரூ.10,000/- லஞ்சம் கேட்கும் திருப்பரங்குன்றம், நகர நிலவரித்திட்ட தனி சார்-ஆய்வாளர் திரு.பிரேம்குமார் மீது சட்டப் பூர்வமான நடவடிக்கை எடுக்க இந்த புகார் மனுவை கொடுக்கின்றேன், இத்துடன் இ சேவை விண்ணப்பத்தின் இரண்டு ஒப்புகைச் சீட்டுகள், எனது அத்தை அமுதா அவர்களின் பெயரில் உள்ள ஆவண எண் 8852/2004, நாள் 15.12.2004 மற்றும் எனது மனைவி பெயரில் உள்ள காலிமனை ஆவண எண் 6649/2023, நாள் 24.06.2023 ஆகியவற்றின் நகல்களை இணைத்துள்ளேன். மேலும், தனி சார்-ஆய்வாளர் திரு.பிரேம்குமார் கேட்ட லஞ்சப் பணம் ரூ.10,000/-ஐயும் கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள(ஒ-ம்) XXXXXX(P.கிருஷ்ணன்),10/10/23.

**Sir, Received the typed complaint today on 10.10.2023 at 08.00 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Director of Vigilance and Anti-Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 10/2023, u/s. 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 08.45 hrs and took up investigation. Sd./-XXXXXX (K.Kumaraguru) 10.10.2023, Inspector of Police, V&AC, Madurai.**

**Original FIR along with original typed complaint of Tr. P.Krishnan, S/o.Pandi, Plot No 31, Kennet Nagar First street, KeelaMuthupatti,**

Madurai -3 along with Xerox copies of two acknowledgment receipts dated 21.07.2023, Document No. 6649/2023, dated 24.06.2023 in the name of his wife Tmt.K.Saranya and Document No. 8852/2004, dated 15.12.2004 in the name of his mother-in-law Tmt.R.Amutha are herewith enclosed and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

10/10/2023

(K.Kumaraguru)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.